# Pandemic Leave Disaster Payment

Pandemic Leave Disaster Payment என்பது, coronavirus (COVID-19) காரணமாக நீங்களோ, நீங்கள் பராமரித்துவரும் ஒருவரோ சுய-தனிமை அல்லது நோய்க்காப்புத்-தடையில் இருக்கவேண்டியதன் காரணமாக உங்களால் வேலைக்குப் போகவும் வருமானம் ஒன்றை ஈட்டவும் இயலவில்லை என்றால் உதவுவதற்காகக் கொடுக்கப்படும் ஒரு ஒட்டுமொத்தத் தொகைக் கொடுப்பனவாகும்.

## இதை யாரால் பெற இயலும்

கீழே சொல்லப்பட்டுள்ள காரணங்களில் ஒன்றை முன்னிட்டு நீங்கள் சுய-தனிமையில் அல்லது நோய்க்காப்புத்-தடையில் இருக்கவேண்டியது கட்டாயம்:

- உங்களுக்கு COVID-19 இருக்கவேண்டும். 10 ஜனவரி 2022-இற்கு முன்பாக ஆரம்பித்த தனிமைக்காலங்களுக்கு - உங்களுக்கு COVID-19 இருக்கிறது என்று சுகாதார அதிகாரி ஒருவர் நேரடியாக உங்களுக்குச் சொன்னார்.
- COVID-19 உள்ள ஒருவருடன் நீங்கள் நெருங்கிய தொடர்பில் இருந்திருக்கும் நபர் என்று சுகாதார அதிகாரி ஒருவரால் உங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது
- நீங்கள் பராமரித்துவரும் (16 அல்லது அதற்குக் கீழ்ப்பட்ட வயதுடைய) குழந்தை ஒன்று COVID-19 உள்ள ஒருவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருக்கிறது என்று சுகாதார அதிகாரி ஒருவரால் உங்களுக்குச் சொல்லப்படுகிறது
- COVID-19 உள்ள யாராவதொருவரை நீங்கள் பராமரித்துவருகிறீர்கள்
- COVID-19 உள்ள ஒருவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருக்கும் நபர் என்பதன் காரணமாக சுய-தனிமையில், அல்லது நோய்க்காப்புத்-தடையில் இருக்கவேண்டிய இயலாமை அல்லது தீவிர மருத்துவ நிலை ஒன்று உள்ள ஒருவரை நீங்கள் பராமரித்துவருகிறீர்கள்.

இயலாமை அல்லது தீவிர மருத்துவ நிலை ஒன்று உள்ள நபர் வசிக்கும் அதே வீட்டில் நீங்கள் வசித்துக்கொண்டிருக்க வேண்டும் என்பது அவசியம்.

கீழே சொல்லப்பட்டுள்ளா அனைத்தும் உங்களுக்குப் பொருந்தவேண்டியதும் அவசியம்:

- நீங்கள் குறைந்தபட்சமாக 17 வயது ஆனவர்
- நீங்கள் ஒரு Australian வாசி, அல்லது Australia-வில் வேலை செய்வதற்கான உரிமையை உங்களுக்கு அளிக்கும் விசா ஒன்றை வைத்திருப்பவர்
- உங்களுடைய கோரிக்கையை நீங்கள் விடுக்கும் பொழுது உங்களுடைய தனிமைக்காலம் அல்லது பராமரிப்புக் காலத்தில் நீங்கள் Australia-வில் வசித்தீர்கள்
- வேலைக்குப் போகவும் வருமானம் ஒன்றை ஈட்டவும் உங்களால் இயலவில்லை

- பின் வருவன உள்ளடங்க, தகுந்த விடுப்பு உரிமங்கள் ஏதும் உங்களுக்கு இல்லை:
    - பெருந்தொற்று நோய் விடுப்பு
    - தனிப்பட்ட சொந்த விடுப்பு
    - இன்னொருவரைப் பராமரிப்பதற்கான விடுப்பு
- பின் வருவனவற்றை நீங்கள் பெறவில்ல
    - ABSTUDY Living Allowance
    - Paid Parental Leave
    - Dad and Partner Pay
    - JobKeeper Payment
    - COVID-19 Disaster Payment
    - அல்லது வேறெந்த ஆதரவுதவிக் கொடுப்பனவுகள் எதுவும்.

விபரங்களுக்கு **servicesaustralia.gov.au/incomesupportpayments** எனும் வலைத்தலப் பக்கத்தினைப் பாருங்கள்.

18 ஜனவரி 2022-இல் இருந்து ஆரம்பிக்கும் தனிமைக்காலங்களுக்கு, பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்று உங்களுக்குப் பொருந்தினால் நீங்கள் தொற்று உள்ளவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவராவீர்கள்:

- COVID-19 இருப்பது உறுதிப்படுத்தப்படுள்ள நபருடன் நீங்கள் வழமையாக வசித்துவந்தால்
- COVID-19 இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ள நபருக்குத் தொற்று இருந்த பொழுது அவருடன் நீங்கள் 4 மணித்தியாலங்களுக்கு மேலான நேரத்தைக் கழித்திருந்தால்.

27 ஏப்ரல் 2022-இல் இருந்து, 'தொற்று உள்ள ஒருவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவர்' என்பதற்கான உங்களுடைய மாநில அல்லது எல்லைப்-பிரதேச அரசின் அர்த்தத்திற்கு நீங்கள் உட்பட்டவராக இருந்தால், நீங்களும் தொற்று உள்ள ஒருவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவராகக் கருதப்படுவீர்கள்.

18 ஜனவரி 2022-இல் இருந்து ஆரம்பிக்கும் தனிமைக்காலங்களுக்குத் தகுதி பெற கீழே சொல்லப்பட்டுள்ள இரண்டு விடயங்களையும் நீங்கள் அவசியம் பூர்த்தி செய்தாகவேண்டும்:

- குறந்தபட்சமாக 8 மணித்தியால நேரத்திற்கான வேலையை அல்லது முழு-நாள் வேலையை நீங்கள் இழந்திருக்கவேண்டும்
- நீங்கள் கோரிக்கை விடுக்கும் காலப்பகுதியின் முதல் நாளன்று உங்களிடம் உள்ள 'பண-வடிவு சொத்துகள்' $10,000-இற்குக் குறைவாக இருக்கவேண்டும்.

பணமாகவோ, சேமிப்பாகவோ, எளிதில் பணமாக மாற்றப்படக்கூடிய சொத்துகளாகவோ இருக்கும் நிதிகள் எதுவும் 'பண-வடிவு சொத்துகள்' என்று சொல்லப்படும். உதாரணமாக, மற்றவர்களுக்குக் கடனாகக் கொடுத்துள்ள பணத்தைச் சொல்லலாம்.

ஒரு சோடியினரில் நீங்கள் ஒருவரானால், நீங்கள் இருவரும் இந்தக் கொடுப்பனவிற்கான கோரிக்கையை விடுக்கலாம். நீங்களும் உங்களுடைய வாழ்க்கைத்துணைவரும் தனித்தனி கோரல்களைப் பூர்த்தி செய்யவேண்டியிருக்கும்.

## உங்களால் எவ்வளவு தொகையினைப் பெற இயலும்

நீங்கள் கோரிக்கை விடுக்கும் தனிமைக்காலம் அல்லது நோய்க்காப்புத்-தடைக் காலம் எவ்வளவு, மற்றும் எத்தனை மணித்தியாலங்களுக்கான வேலையை நீங்கள் இழந்திருக்கிறீர்கள் என்பவற்றைப் பொறுத்து உங்களால் பெற இயலுமான தொகை அமையும். மேலதிகத் தகவல்களுக்கு **servicesaustralia.gov.au/pandemicleavedisasterpayment** எனும் வலைத்தலப் பக்கத்தினைப் பாருங்கள்.

Pandemic Leave Disaster Payment வரி விதிக்கப்படக்கூடிய வருமானமாகும். உரிய நிதியாண்டில், உங்களுடைய வரி செலுத்தவேண்டிய வருமானத்தில் நீங்கள் இதை உள்ளடக்கவேண்டும் என்பது இதன் பொருள்.

## கோரிக்கையை விடுப்பது எவ்வாறு

18 ஜனவரி 2022-இலிருந்து துவங்கும் தனிமைக்காலம் அல்லது பராமரிப்புக் காலத்திற்கு, myGov மூலமாக உங்களுடைய Centrelink online account-ஐப் பயன்படுத்தி நீங்கள் உங்களுடைய கோரலை விடுக்கவேண்டியது அவசியம். **servicesaustralia.gov.au/mygov** எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்.

உங்களுடைய தனிமைக்காலம் அல்லது பராமரிப்புக் காலம் துவங்கியதிலிருந்து 14 நாட்களுக்குள்ளாக உங்களுடைய கோரலை நீங்கள் சமர்ப்பித்தாக வேண்டும்.

17 ஜனவரி 2022- இலிருந்து துவங்கும் தனிமைக்காலம் அல்லது பராமரிப்புக் காலத்திற்கான கோரிக்கையை விடுக்க **180 22 66**-இல் எம்மை அழையுங்கள். மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவையா என்பதை எமக்குத் தெரிவியுங்கள், ஒருவரை நாங்கள் இலவசமாக ஏற்பாடு செய்வோம்.

- Centrelink கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளைப் பற்றி எம்முடன் உங்கள் மொழியில் பேச
  **131 202**-இல் எம்மை அழையுங்கள்.
- ஆங்கிலத்திலுள்ள மேலதிகத் தகவல்களுக்கு **servicesaustralia.gov.au/pandemicleavedisasterpayment** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.
- உங்கள் மொழியிலுள்ள தகவல்களை வாசிக்க, செவிமடுத்துக் கேட்க, அல்லது காணொலிகளைப் பார்க்க **servicesaustralia.gov.au/yourlanguage** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.

# கிடைக்கக்கூடிய மற்ற சேவைகள்

இந்தக் கொடுப்பனவை உங்களால் பெற இயலாது என்றால், வேறு எந்தக் கொடுப்பனவுகளை உங்களால் பெற இயலுமாகலாம் என்பதைத் தெரிந்துகொள்ள **servicesaustralia.gov.au/paymentfinder** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.

குடும்ப வன்முறை அல்லது இல்ல வன்முறையினால் நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால்:

- **180 22 66**-இல் எம்மை அழைத்து, எமது சமூக சேவகர்களில் ஒருவருடன் பேச வேண்டுமெனக் கேளுங்கள். மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவையா என்பதை எமக்குத் தெரிவியுங்கள், ஒருவரை நாங்கள் இலவசமாக ஏற்பாடு செய்வோம்.
- குடும்ப வன்முறை மற்றும் இல்ல வன்முறையைப் பற்றியும், எம்மால் எப்படி உதவ இயலும் என்பதைப் பற்றியும் வாசியுங்கள். **servicesaustralia.gov.au/enough** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.

உங்களுடைய வீட்டுத் தொலைபேசியிலிருந்து '13' இலக்கங்களுக்குச் செய்யப்படும் அழைப்புகளுக்கு நிலைப்படுத்தப்பட்ட வீதத்திலான கட்டணம் ஒன்றை உங்களுடைய தொலைபேசிச் சேவை வழங்குநர் அறவிடக்கூடும். Australia-வில் எங்கிருந்தும் செய்யப்படும் அழைப்புகளுக்கு இது பொருந்தும், அத்துடன் உங்களுடைய தொலைபேசிச் சேவை வழங்குநரைப் பொறுத்து இந்த வீதம் மாறுபடலாம். உங்களுடைய வீட்டுத் தொலைபேசியிலிருந்து '1800' இலக்கங்களுக்குச் செய்யப்படும் அழைப்புகள் இலவசம். பொதுத் தொலைபேசி ஒன்றிலிருந்து நீங்கள் அழைப்பீர்களேயானால், தொலைபேசிச் சேவை வழங்குநர்கள் உங்களுடைய அழைப்பிற்கு ஆகும் நேரத்தைக் கணக்கிட்டு அதியுயர் வீதத்திலான கட்டணம் ஒன்றை அறவிடக்கூடும்.

## பொறுப்புத்துறப்பு:

27 ஏப்ரல் 2022 அன்று இருந்தவாறு இந்தத் தகவல்கள் சரியானவை. உங்களுடைய தனிப்பட்ட சூழ்நிலைகளைப் பொறுத்து, இந்தக் கொடுப்பனவிற்கான கோரலை விடுக்க முடிவு செய்வது உங்களுடைய பொறுப்பாகும். நீங்கள் எமக்குக் கொடுக்கும் தகவல்கள் உண்மையானதாகவும், சரியானதாகவும் இருக்கவேண்டியதை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டியதும் அவசியம்.

# Pandemic Leave Disaster Payment

Pandemic Leave Disaster Payment is a lump sum payment to help if you are unable to work and earn income because you or someone you are caring for has to self-isolate or quarantine due to coronavirus (COVID-19).

## Who can get it

You must be self-isolating or quarantining for one of the reasons below:

- you have COVID-19. For isolation periods starting before 10 January 2022, a health official told you directly you have COVID-19.
- you have been told by a health official you are a close contact of a person who has COVID-19
- you are told by a health official a child you are caring for (who is 16 years or under) is a close contact of a person who has COVID-19
- you are caring for someone with COVID-19
- you are caring for someone with disability or a severe medical condition who must self-isolate or quarantine because they are a close contact of a person with COVID-19.

You must live in the same household as the person with the disability or severe medical condition.

You must also meet all of the points below:

- you are at least 17 years old
- you are an Australian resident, or hold a visa that gives you the right to work in Australia
- you lived in Australia during your isolation or caring period and at the time of your claim
- you are unable to go to work and earn an income
- you have no suitable leave entitlements including:
  - pandemic sick leave
  - personal leave
  - leave to care for another person
- you do not get
  - ABSTUDY Living Allowance
  - Paid Parental Leave
  - Dad and Partner Pay
  - JobKeeper Payment
  - COVID-19 Disaster Payment
  - or any income support payments.

See **servicesaustralia.gov.au/incomesupportpayments** for details.

For isolation periods starting from 18 January 2022, you are a close contact if you either:

- usually live with the person who has tested positive with COVID-19
- have stayed in the same household for more than 4 hours with the person who has tested positive with COVID-19 during their infectious period

From 27 April 2022, you are also a close contact if you meet your state or territory definition of a close contact.

For isolation periods starting from 18 January 2022, you must also meet both points below to be eligible:

- you have lost at least 8 hours or a full day of work
- your liquid assets are less than $10,000 on the first day of the period you are claiming for.

Liquid assets are any funds readily available to you in cash or savings, or assets that can easily be changed into cash. For example, money loaned to other people.

If you are a member of a couple, you can both claim this payment. You and your partner need to complete separate claims.

## How much you can get

The amount you can get depends on the isolation or quarantine period you are claiming for, and how many hours of work you lost. For more details, see **servicesaustralia.gov.au/pandemicleavedisasterpayment**

The Pandemic Leave Disaster Payment is taxable income. This means you need to include it in your income tax return for the relevant financial year.

## How to claim

For isolation or caring periods starting from 18 January 2022, you must claim using your Centrelink online account through myGov. Go to **servicesaustralia.gov.au/mygov**

You must submit your claim within 14 days of the start of your isolation or caring period.

For isolation or caring periods that began on or before 17 January 2022, call us on **180 22 66** to claim**.** Let us know if you need an interpreter, and we will arrange one for free.

- Call us on **131 202** to speak to us in your language about other Centrelink payments and services.
- For more information in English, go to **servicesaustralia.gov.au/pandemicleavedisasterpayment**
- go to **servicesaustralia.gov.au/yourlanguage** where you can read, listen to or watch videos in your language.

## What other services are available

If you cannot get this payment, check what other payments you may be able to get at **servicesaustralia.gov.au/paymentfinder**

If you are affected by family and domestic violence:

- call us on **180 22 66** and ask to speak with one of our social workers. Let us know if you need an interpreter, and we will arrange one for free.
- read about family and domestic violence and how we can help. Go to **servicesaustralia.gov.au/enough**

Your phone provider may charge you a fixed rate for calls from your home phone to ‘13’ numbers. This is from anywhere in Australia and the rate may vary depending on your phone provider. Calls to ‘1800’ numbers from your home phone are free. Phone providers may time your call and charge a higher rate if you call from a public or mobile phone.

## Disclaimer:

This information is correct as of 27 April 2022. It is your responsibility to decide to claim for this payment based on your personal circumstances. You must also make sure the information you give us is true and correct.